அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவச் சேவை அளிக்கும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாகத் தரம் உயர்த்துமாறு கேட்டு இருக்கிறார்கள். கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அந்த நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்று, விரைவிலே தரம் உயர்த்தப்பட்டு, 30 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ நிலையமாக அங்கே ஏற்பட இருக்கிறது என்பதையும், அந்த மருத்துவ நிலையம் விரிவுபடுத்தப்படுகின்றபோது, எக்ஸ்-ரே வசதி, ஆபரேஷன் செய்கிற வசதி, ஆகிய அனைத்தும் அங்கே கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 57, திரு கே.கே. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

57—

கட்டடம்

***7724—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள முடுக்கன்குளம் கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியிலுள்ள முடுக்கன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

2002 அக்டோபர் 29]

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, வரும் நிதி ஆண்டிலேயாவது கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடுக்கன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தொடர்ந்து 3 ஆண்டுகள் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அது இலாபத்திலே இயங்குகிற நேரத்திலே உறுப்பினருடைய கோரிக்கையை அரசு யோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 58. திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

58—

விவசாயிகளுக்கு நிவாரணம்

***17918—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை மற்றும் அதனைச் சார்ந்த விவசாய மக்கள் (2002-ல்) சமீபத்தில் ஏற்பட்ட மழையினால் பாதிக்கப்பட்டதால், அவர்களுக்கு நிவாரணம் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். 2002 பிப்ரவரி திங்கள் முதல் வாரத்தில் பருவம் மாறிப் பெய்த கன மழையால் சேதமடைந்த நெல் மற்றும் இதர பயிர்களுக்காக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவும் மற்றும் இதர சேதாரங்களைச் சீர்செய்யவும் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு ரூ.49 கோடி இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து